31st August 1959]

(4) THE MADRAS HINDU RELIGIOUS AND CHARITABLE ENDOWMENTS BILL, 1959 (L.A. BILL NO. 7 OF 1959).

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, I present the report of the Joint Select Committee on the Madras Hindu Religious and Charitable Endowments Bill, 1959 (L.A. Bill No. 7 of 1959).

VI.—GOVERNMENT BILLS.

(1) THE MADRAS CIVIL COURTS (AMENDMENT) BILL, 1959.

*THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir. I beg leave to introduce the Madras Civil Courts (Amendment) Bill, 1959[a] and move :

" That the Bill be taken into consideration."

கனம் சபாநாயகர் அவர்களே, இது சிறிய மசோதா. இந்த மதராஸ் சிவில் கோர்ட்டுகள் சட்டம் 1873-ல் ஏற்பட்ட பழைய சட்டம். அதன்படிதான் வெளி ஊர்களில் கோர்ட்டுகள் இயங்குகின்றன, வழக்குகள் தாக்கல் செய்யப்படுகின்றன. அதிலே ஒரு கஷ்டம் உணரப்பட்டு வருகிறது. வெளி ஊர்களில் கோர்ட்டுகள் கோடை விடுமுறைக்காக மூடப்பட்டிருக்கும்பொழுது அவசரமாக வழக்குகள் தாக்கல் செய்ய வேண்டுமென்றால், தாக்கல் செய்ய முடியாமல் இருக்கிறது. அதற்கு சட்டத்தில் இடமில்லை. பத்து ஆண்டுகளுக்கு மேலாகவே இந்த விஷயம் பரிசீலனை செய்யப்பட்டு வந்திருக்கிறது. கோடை விடுமுறைக் காலத்தில் உயர் நீதி மன்றத்தில் அவசரக் கேஸ்களை கவனிப்பதற்காக 'வெக்கேஷன் ஜட்ஜ்' ஒருவர் இருக்கிறார். ஆனால் வெளி ஊர்களில் கோடை விடுமுறை காலத்தில் கோர்ட்டுகள் மூடப்பட்டிருக்கும்பொழுது அவசரமாக கேஸ்கள் 'பைல்' செய்வதற்கு முடிவதில்லை. அம்மாதிரி சமயங்களில் உயர் நீதி மன்றத்தில் வழக்குகளை 'பைல்' செய்யலாம் என்ற ஒரு யோசனை இருந்தது. அந்த யோசனையும் பரிசீலனை செய்யப்பட்டு, உயர் நீதி மன்றத்தாரின் யோசனையையும் கேட்ட பிறபாடு முடிவாக இப்பொழுது இந்த திருத்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்த மசோதாவின்படி கோடை விடுமுறை காலத்தில் வெளி ஊர்களில் டிஸ்டிரிக்ட் கோர்ட், சப்-கோர்ட்டு, முன்சீப் கோர்ட் இவைகளெல்லாம் மூடப்பட்டிருந்தால், அவசரமாக வழக்குகள் பைல்' செய்ய வேண்டுமென்றாலோ அல்லது அதற்கு மேல் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்றாலோ, அவைகளைக் கவனிப்பதற்காக ஒரு 'சப்-ஜட்ஜ் 'வெக்கேஷன் ஜட்ஜாக' நியமிக்கப்படுவார். அதற்காகத்தான் இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த மசோதாவின் எந்தவிதமான ஆட்சேபனைக்கும் இடமில்லை. ஒரு புதிய வசதியை கட்சிக்காரர்களுக்கு அளிப்பதற்காகவே இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதை ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

MR. SPEAKER : Motion moved—

'That the Madras Civil Courts (Amendment) Bill, 1959, be taken into consideration'.

* SRI R. SRINIVASA IYER : Mr. Speaker, Sir, this of course is a welcome measure because it will give great relief to mufassal clients and lawyers. But I have got to bring to the notice of the Government certain anomalies that may arise because of the wording adopted in the amendment. Of course, since no time was given for giving notice of amendments to this Bill we could not

---

a Published in the *Fort St. George Gazette* dated 1st July 1959.

give any amendment now. The Bill is proposed to be passed into law to-day and therefore I crave the leave of the House to point out the anomalies that might be caused by the amendment.

In clause 4, a new sub-section (2) is sought to be added to the existing section 30. The wording used as 'for the duration of the adjournment of any District Court in summer, appoint for such District Court a Subordinate Judge to be designated the Vacation Civil Judge'. And the new sub-section (3) says: 'The local limits of the jurisdiction of the Vacation Civil Judge shall be the same as those of the District Court concerned'. Let me give an example how this will create anomalies. The Tanjore District Court has no local jurisdiction over Aranthangi or Tanjore taluks. The District Court has Original Civil Jurisdiction only over Pattukkottai taluk, while the Subordinate Judge's Court in Tanjore has jurisdiction over these two taluks and also Mannargudi. Similarly the court at Kumbakonam has got jurisdiction only over two taluks. There may be such anomalies in other districts also which I do not know. Therefore I would like the wording of the section to be amended to state: 'the District Court and the Subordinate Judge's Court in the district concerned', instead of merely saying '. . . the District Court concerned', because the object of the amendment is that during the vacation of all the courts the Vacation Judge to be appointed will exercise all the powers of all the courts, District Court, Sub-Court and the Munsiff's Court.

Then, Sir, this amendment will mean it has reference only to Original Civil Jurisdiction. The Small Cause Judges are different. The position must be clarified that the local limits of the jurisdiction of the Vacation Civil Judge shall be the same as those of the District Court and the Subordinate Courts in the district concerned. For, Tanjore district for example, we have East Tanjore which is a separate district from West Tanjore.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: I do not mind, if the hon. Member will move suitable amendments to the clauses at the appropriate stage.

MR. SPEAKER: The hon. Member can move amendments to that effect.

SRI R. SRINIVASA IYER: I had no time to give them earlier. I shall give them now.

Another point I would urge upon the Government for consideration is this. It is stated in the Bill that the jurisdiction of the Vacation Civil Judge shall extend to all suits, appeals and other proceedings pending in, or cognizable by, any Civil Court (whether a District Court, a Subordinate Judge's Court or a District Munsiff's Court) in the district concerned when such court is adjourned for summer vacation. The rule is during the closure of the District Munsiff's Court the Civil Judge will have jurisdiction. It may vary in other cases. Such changes should be provided for.

31st August 1959] [Sri R. Srinivasa Iyer]

Then, Sir, in respect of the place at which the Vacation Judge shall sit, I have a suggestion to make. Of course the Government are going to appoint the Subordinate Judge to exercise jurisdiction in the district concerned. For instance the Sub-Judge, Kumbakonam, may be appointed to exercise jurisdiction in the whole of the Tanjore district. It will be better for him to hold his court at Kumbakonam itself. Of course the Government might take power to state by notification where the court shall sit. If the Subordinate Judge, Kumbakonam, were to go to Tanjore and sit there, it may even cost the Government something by way of travelling allowance for the Judge. And the Judge has got to find a house to live in and there are all these difficulties. All these difficulties could be avoided, if the Government take power to specify the place at which the Vacation Judge will sit.

MR. SPEAKER : I would like to make a statement in view of what Mr. Srinivasa Iyer has stated just now. He has tried to make out that no time has been given to move amendments to this Bill. But I must inform him that this Bill was published in the Gazette on 1st July 1959. It was also distributed to Members on 1st July 1959. Notice of introduction of this Bill was circulated to Members on 21st July 1959. Now we are on 31st August 1959 and if forty days are not enough, I do not know how much more time do Members require. If they have not seen the Gazette, that is a different matter. Also if they have not taken care to give notice of amendments, that is also a different matter. But it is quite an unjust thing to say that time has not been given to Members to give notice of amendments.

SRI R. SRINIVASA IYER : Sir, I am very sorry about it. I did not say that we had no time to study the Bill. I thought that one day would be given for giving notice of amendments. Of course, the Chair has given time till 4 o'clock to-day to give notice of amendments. But usually some more time is required to give notice to amendments to Bills. Anyhow, I withdraw what I have stated in respect of this matter.

THE HON. SRI C. SUBRAMANIAM : The agenda for to-day has already been circulated and this Bill finds a place there. The Rules, provide, when hon. Members should give notice of their amendments, and therefore they should have sent in their amendments according to the rules.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I submit that further consideration of the Bill may be put off till tomorrow and in the mean time the hon. Member may be allowed to give notice of amendments which would be examined.

MR. SPEAKER : I have no objection to postpone it till to-morrow but the same point will be made in every Bill. Is it the desire of the House . . .

THE HON. SRI C. SUBRAMANIAM : The hon. Member has already studied it and if that is the only amendment he contemplates, it can be moved as an official amendment.

[31st August 1959

SRI S. LAZAR : மிஸ்டர் ஸ்பீக்கர் ஸார், இது போன்ற குறைகளையும் கஷ்டங்களையும் தவிர்ப்பதற்காகவே எனக்குத் தெரிந்த வரையில் பார்லிமெண்டரி முறைப்படி அநேகமாக எல்லா பார்லிமெண்டிலும் சரி சட்டங்களை ஒரேயடியாகப் பாஸ் செய்யாமல் முதல் ரீடிங், இரண்டாவது ரீடிங் மூன்றுவது ரீடிங் இவைகளை தனித்தனியாக எடுத்துக் கொள்வது வழக்கமாக இருந்து வருகறது. ஆனால் இங்கு ஒரே சமயத்தில் எடுத்துக்கொண்டு நிறைவேற்றுவதாக இருக்கிறது. அந்தப் பழக்கத்தை இங்கு நாம் கையாண்டுகொண்டு வருகிறோம். அதன் காரணமாக இப்பொழுது ஒரு குறை இங்கே வந்திருக்கிறது, என்பதை மட்டும் இப்பொழுது நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். கூடியவரைக்கும் இப்பொழுது இருக்கக்கூடிய பழக்கத்தை அதாவது கன்வென்ஷனை மாற்றிக்கொள்ள வேண்டியதவசியமாக இருக்கிறது. அதற்கு வேண்டிய. அவசியமும், வாய்ப்பும் இப்பொழுது எற்பட்டிருக்கிறது. அப்படி மாற்றி அமைக்கக் கூடிய வாய்ப்பை கனம் சபாநாயகர் அவர்கள் தேடிக்கொடுக்க வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, in any event postponement takes place only in respect of the third reading of the Bill. Amendments have to be considered at the second reading stage and therefore this question does not arise at all. The question arises with reference to the first day's business where Bills are included for consideration. Those Bills were published long before the commencement of this session and the agenda also was circulated. So if, hon. Members are interested in the Bill, they could have gone through it and submitted their amendments before the meeting of the Assembly if they wanted to do. But I do agree that generally hon. Members perhaps bestow their attention on these things only after coming to Madras in connection with the meeting of the Assembly and I admit that it is quite natural also. Therefore, necessary adjustments could be made but the hon. Member need not think that the other thing would solve the problem.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Sir, I entirely agree with Mr. Srinivasa Iyer and I request the Chair to permit him to move his amendment and we can pass the Bill to-morrow. In the meantime hon. Members can study it. Of course, hon. Members are supposed to go through the Gazette.

MR. SPEAKER : As a special case, we shall give time to Mr. Srinivasa Iyer to move his amendment and in the meantime the discussion on the Bill can be continued, or the House could agree to the suggestion of the Hon. Minister for Home to postpone the consideration of the Bill till to-morrow.

SRIMATHI T. N. ANANDANAYAKI : Sir, it will be always better to give some time between the first and second reading of the Bill. If we rush through the Bill, it will affect so many people. Unless we give proper thought to the Bill, it may not be useful to the society and there will be a lot of loopholes. Now, for all the four Bills, we have to give notice of amendments before 4 o'clock. Now it is about 2-30 and we have to rush to the Secretary's room and give our amendments before 4 o'clock. We must be given at least 24 hours to give notice of amendments.

31st August 1959]

Mr. SPEAKER : The procedure in foreign countries like the United Kingdom is as follows. Firstly, the Bill is published in the Gazette and then public opinion is elicited. Then there is the first reading and most of the Bills go to the Select Committee. Then amendments are given and then there is the third reading. But here for want of time, we try to hurry these things. It is for you, Members, to ask your leaders to give enough time.

Srimathi T. N. ANANDANAYAKI : We must be very careful . . .

Mr. SPEAKER : At the meeting of the Business Advisory Committee, the party leaders agreed to finish some of these Bills in one day. Therefore, the hon. Member must convince the leaders that Members want more time. If she succeeds in her attempt, I shall be the happiest person to sit and go on listening to the speeches. Anyway, we shall now continue the discussion on the Bill.

Sri S. LAZAR : கனம் சபாநாயகர் அவர்களே, 1873-ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட இந்தச் சட்டத்தில் இப்பொழுது நல்ல முக்கியமான அம்சங்களைக் கொண்ட ஒரு திருத்தத்தை இன்றைய தினம் கனம் அமைச்சர் அவர்கள் பிரேரேபித்திருக்கிறார். இந்த ஒரு திருத்தம் வெகு நன்றாகவே அமைக்கப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி கனம் மந்திரி அவர்கள் வெகு அழகாக எடுத்துரைத்தார்கள். இந்த ஒரு திருத்தத்தைக் கொண்டு வருவது போன்று சட்ட பூர்வமாக உள்ள மற்ற திருத்தங்களையும் கொண்டுவந்து நிறைவேற்றுவது அவசியமாக இருக்கிறது. அவைகள் எல்லாம் நடைமுறைக்கு ரொம்பவும் அவசியமாக இருக்கின்றன.

இப்பொழுது நீதி ஸ்தலங்களில் தாவாக்களை பைசல் செய்வதற்கு ஒரு முறையைக் கையாண்டு கொண்டு வருகிறார்கள். அது சம்பந்தமாகவும் சில குறைபாடுகளும் இருக்கின்றன. அவைகளையும் தீர்ப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். முதலாவதாக இப்பொழுது நீதி ஸ்தலங்களில், முக்கியமாக ஹைக்கோர்ட் மற்ற நீதி ஸ்தலங்களுக்கு தாவாக்களை எவ்வளவு தூரம் பைசல் செய்ய வேண்டும் என்ற கணக்கு வைத்து அதற்குத் தகுந்த உத்தாவும் அனுப்பியிருப்பதாகவும் தெரியவருகிறது. ஒரு மாதத்திற்கு இவ்வளவு கேஸ்கள் பைசல் செய்ய வேண்டுமென்ற ஒரு கணக்கு வைத்திருப்பதாகத் தெரிய வருகிறது. அந்த முறையில் சாதாரணமாக அவர்களுடைய வேலையை நிர்ணயம் செய்திருக்கிறார்கள். இந்த முறைப்படி சாதாரண ஸ்மால் காஸ் கேஸ்களுக்கும் அல்லது ரெண்ட் கண்ட்ரோல் கேஸ்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்து பெரிய தாவாக்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காது அவர்கள் அநேகம் கேஸ்களை பைசல் செய்ததாக கணக்கு காட்ட வேண்டியதாக இருக்கிறது. அந்த அடிப்படையில் அவர்கள் தங்களுடைய பைசல்களைக் காண்பித்தால் அதை வைத்துக் கொண்டு ஜட்ஜுகளுக்கு ப்ரமோஷனோ அல்லது சம்பள உயர்வோ கொடுப்பதாகத் தெரிய வருகிறது. இந்த முறை இருப்பதால் இன்றையதினம் பார்த்தால் சாதாரணமாக ஒரிஜனல் சைட் அல்லது அப்பீல் போன்ற கேஸ்கள் கணக்குக்கு வராது பதிவாகி அநேகம் நாட்களானாலும் கூட பைசலுக்கு எடுத்துக் கொள்ளப்படாமல் இருக்கின்றன. அப்படிப்பட்ட பல கேஸ்கள் வருஷக் கணக்கில் இழுத்துக்கொண்டே செல்லப்படுகிறது. இது ஒரு காரணமாக இருக்கிறது, கேஸ்கள் பைசல் ஆகாமல் இருப்பதற்கு இதனால் பொது மக்களுக்கு பெரும் அளவுக்கு துன்பமும் கஷ்டமும் ஏற்பட்டிருக்கிறது. இதை மாற்றி அமைக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. அதிக கேஸ்கள் பைசல் செய்ததாக கணக்குக் காட்ட வேண்டும் என்ற முறை இல்லாமல், எல்லா கேஸ்களுக்கும் சரி சமமான சந்தர்ப்பம்

கொடுத்து பைசல் செய்வதற்கு வழிவகை செய்ய வேண்டியதாக இருக்கிறது. ஆகவே இந்த முறையை பல நீதி ஸ்தலங்களில் மாற்றி அமைக்க வேண்டியதவசியமாக இருக்கிறது. அப்படி மாற்றி அமைத்தால் ஒருக்கால் கேஸ்கள் சரியானபடி காலதாமதம் ஏற்படாமல் பைசல் ஆவதற்கு வழி ஏற்படலாம் என்று தோன்றுகிறது.

இதைவிட இன்னொரு முக்கியமான விஷயம் ஒன்று இருக்கிறது. இப்பொழுது எல்லா நீதி ஸ்தலங்களுக்கும் எல்லை அதாவது ஜுரிஸ்டிக்ஷன் கொடுத்திருக்கிறார்கள். அது மாறுபட்ட ஜுரிஸ்டிக்ஷனாக இருக்கிறது. அதாவது நீதி ஸ்தலங்களுக்கு ஒரு விதமான ஜுரிஸ்டிக்ஷனும் ரெவினியூ ஜுரிஸ்டிக்ஷனும் வேறு விதமாக இருக்கிறது. சட்ட ரீதியாகப் பார்க்கும் போது இப்படி மாறுபட்டிருப்பதால் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. இரண்டும் ஒன்றாக இருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. இப்படி மாறுபட்டு அமைந்திருக்கின்ற காரணத்தால் ஏனைய காரியங்களுக்கு ரெவினியூ கோர்ட்டை ஒரு இடத்திற்கும் சிவில் கோர்ட்டை ஒரு இடத்திற்கும் தேடிக்கொண்டு போக வேண்டியதாக இருக்கிறது. நீதி ஸ்தலங்களுக்கு வழக்கமாக இருக்கக்கூடிய ஜுரிஸ்டிக்ஷனை விட்டு விட்டு ரெவினியூ சம்பந்தமாக அதனுடைய ஜுரிஸ்டிக்ஷனை தேடிக்கொண்டு போக வேண்டியதாக இருக்கிறது. இதனால் பொது மக்கள் பெரும் அளவிற்கு துன்பத்திற்கு ஆளாகிறார்கள். இந்த ஒரு முறையை மாற்றி ரெவின்யூ கோர்ட்டுகளை ஜில்லா
2-30 p.m. கோர்ட் அளவில் நிறுவி, இரண்டு மூன்று தாலுக்காக்களுக்கு ஒன்றாகவாவது சப் கோர்ட்டுக்களை மாற்றி அமைத்தால் இந்தச் சிக்கல்கள் எல்லாம் தீர்க்கப்பட்டு பொது மக்களுக்கும் பெரும் அளவுக்கு ஆதாயம் ஏற்படும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

(Deputy Speaker in the Chair.)

அதோடு கூட நீதிஸ்தலமானது எப்படி நடக்கிறது என்பதைப் பற்றி பேசுகின்றபோது, பெருவாரியான அளவிற்கு இதைப்பற்றி விசாரணை செய்யப்பட்டு ஒரு யதாஸ்து சமர்ப்பிகப்பட்டிருக்கிறது. மத்திய சாக்கார் அதன் நகல்களை மாகாண சர்க்கார்களுக்கு சமர்ப்பித்திருப்பதாகத் தெரிய வருகிறது. இந்த ரிப்போர்ட்டுகளில் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற கருத்துக்களை என்ன என்ன என்று விவரமாகச் சொல்வதற்கு இப்போது நேரம் எனக்கு இல்லை—நன்றாகக் கவனித்து அவற்றை நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டும், அவர்கள் குறிப்பிட்டிருக்கிற குறைபாடுகளை எல்லாம் உடனடியாக நிவர்த்திப்பதற்கும் வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும். அதற்கான முயற்சிகளை உடனடியாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதை வற்புறுத்திச் சொல்லிக்கொண்டு கனம் சீனுவாச ஐயர் சொன்னதுபோல் அவர்கள் கொடுத்திருக்கும்படியான திருத்தம் மிகமிக முக்கியமானது, அதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று வற்புறுத்திச் சொல்லிக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

*Sri P. S. CHINNADURAI: மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே இந்தத் திருத்த மசோதா ஓரளவு அதிகப்படியான செலவை ஏற்படுத்தும் என்றாலுங்கூட உண்மையாக மக்களுக்கு விரைவில் வழக்குகளைத் தீர்க்க உதவி செய்யும் என்கிற காரணத்தினால் இதை வரவேற்கிறேன். சாதாரணமாக சிவில் வழக்குகள் முடிவதற்கு மிகவும் காலதாமதமாகின்றன. அநேக ஆண்டுகள் ஆகியும்கூட முடிவு ஏற்படாமல் அநேக வழக்குகள் இருந்து வருகின்றன என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரிந்த விஷயம் அதுவும் "சிவில் வழக்கு போல" என்ற பழமொழி கூட இப்போது தமிழ் நாட்டில் உலவ ஆரம்பித்து இருக்கிறது. சிவில் வழக்கு என்றால் அவ்வளவு காலதாமதமாகிறது என்பது அதன் பொருள். இப்படி அதிக நாட்கள் காலதாமதமாகாதவாறு விரைவில் வழக்குகள் தீர்வதற்குத் தகுந்த ஏற்பாடுகளைச் செய்யும் ஒரு மசோதாவைக் கொண்டு வருவார்களேயானால் அது மிகவும் பயன் உள்ளதாக இருக்க முடியும் என்பதையும், அப்படிப்பட்டதொரு விரிவான மசோதா வருமானால் அதை நிச்சயமாக மக்கள் வரவேற்பார்கள் என்பதையும் இந்த நேரத்தில் வலியுறுத்தி

31st August 1959] [Sri P. S. Chinnadurai]

சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அந்தக் காரணத்தைக் கொண்டு இந்த மசோதாவையும்—ஓரளவு விடுமுறை நாட்களிலும் அவசரமான கேஸ்களின் விசாரணைக்கு அதிக உதவி செய்யும் இம்மசோதாவையும் வரவேற்கிறேன் என்று சொல்லிக் கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

* **Sri V. SANKARAN** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தத் திருத்த மசோதாவை ஆதரித்துப் பேசும்போது ஒரு சில கருத்துக்களை மட்டும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். சாதாரணமாக ரெவின்யூ கோர்ட்டுகளை எடுத்துக்கொண்டால் வக்கீல்களுக்கு அதிகமான கஷ்டங்கள் ஏற்படுகின்றன. அதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ரெவின்யூ கோர்டுகளிலே ப்ரிஸைட் பண்ணுகிற ஆர்.டி.ஓ. போன்ற ஆபீசர்களுக்கு வேறு பல அலுவல்களும் இருப்பதனால் அவர்கள் குறிப்பிட்ட நேரத்திற்கு ஒன்றிரண்டு மணி கழித்துக்கூட வருகிறார்கள். அதுவும் இந்தக் கோர்ட்டுகள் சிவில் கோர்ட்டுகள் இருக்கும் இடத்தில் இருப்பது இல்லை. இரண்டு மூன்று மைல்கள் தள்ளி வேறு இடத்தில் இருக்கின்றன. ஆகவே சிவில் கோர்ட்டில் ஒரு வக்கீல் வழக்காடிவிட்டு ரெவின்யூ கோர்ட்டுக்குப் போவது என்றால் இரண்டு மூன்று மைல் தள்ளி போவதற்குள் நேரமாகிவிடுகிறது. இல்லாது அங்கே போய் இங்கு வரலாம் என்றால் அங்கே சில மணி நேரங்கள் காத்து இருக்கும் படியாகவும் வந்து விடுகிறது. ரெவின்யூ கோர்ட்டில் ஒரு வழக்கு என்றால் அந்த வக்கீலால் வேறு ஒரு வேலையையுமே அன்றைக்குக் கவனிக்க முடியாமல் போய்விடுகிறது. குறிப்பாக இந்த ப்ரிஸைடிங் ஆபீசர்களுக்கு வேறு எந்த வேலை இருந்தாலும்கூட தினசரி குறிப்பிட்ட ஒரு சில மணி நேரம் கண்டிப்பாக கோர்ட்டு வேலையை கவனிக்க வேண்டும் என்று வைத்துவிட்டால் வக்கீல்கள் குறிப்பிட்ட நேரத்தில் அங்கே போவதற்கும், காத்து இராமல் காரியங்களைச் செய்து கொள்வதற்கும் வசதி ஏற்படும். அல்லது சிவில் கோர்ட் ப்ரிமிஸிஸிலேயே இதுவும் இயங்கும்படியாகச் செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக ஜட்ஜுகள் "டிஸ்போஸல் மேனியாவில்" முறைப்படி வழக்குகளை சீக்கிரம் தீர்த்துவிட வேண்டும் என்பதற்காக காம்ப்ரமைஸ் பண்ணிக்கொள்ளும்படியாக 'சஜஷன்' என்ற முறையில் சொல்லிவிடுகிறார்கள். அப்போது கட்சிக்காரர்களுக்கும், வக்கீல்களுக்குமே சற்று கஷ்டமாகப் போய்விடுகிறது. ப்ரிஸைடிங் ஆபீசர் சொல்கிற யோசனையை ஏற்றுக் கொள்ளாவிட்டால் எங்கே பாதகமாகப் போய்விடுமோ என்கிற காரணத்தினால் அதை ஏற்றுக் கொள்ளும்படியான நிலை ஏற்படுகிறது. ஓரளவு ஜஸ்டிஸ் கூட அதனால் பாதிக்கப்படுகிறது. இதையும் கவனித்துச் சரிப்படுத்த வேண்டும்.

மேலும் காலிங் கேஸ், ஹியரிங் கேஸ் என்று வரும்போது முதலில் காலிங் கேஸை பூராவையும் கூப்பிட்டுவிட்டு, அப்புறம் ஹியரிங் கேஸை எடுத்துக்கொண்டால் நன்றாக இருக்கும். வக்கீல்கள் அதிகமாகக் காக்க வேண்டியிருக்காது. இதைப்பற்றி சர்க்கார் தகுந்த இன்ஷ்டிரக்ஷன் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

* **Sri T. SAMPATH** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவை நான் மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன். இது வெகு நாள் எதிர்பார்த்த தேவை. கோடைக்கால விடுமுறை நாட்களில் வழக்குகள் தொடர வேண்டுமென்று கட்சிக்காரர்கள் எண்ணினால் அதற்குப் பல சிக்கல்களும், இடையூறுகளும் இருந்தன. மொபஸிலில் இருக்கிற கட்சிக்காரர்கள் விடுமுறை நாட்களில் ஹைக்கோர்ட்டுக்கு வந்து வழக்குத் தொடர வேண்டிய நிலைமை இருந்தது. இப்போது கொண்டு வரப்பட்டிருக்கிற மசோதாவானது அத்தகைய இடையூறை நீக்குகிறது.

இந்த மசோதாப்படி ப்ரின்ஸிபல் ஆக்ட் 17-வது செக்ஷனில் 'நோ டிஸ்ட்டிரிக்ட் ஜட்ஜ்' என்ற பதத்திற்கு அடுத்தாற்போல "வெகேஷன் சிவில் ஜட்ஜ்" என்பது சேர்க்கப்படுகிறது. இது வரவேற்கக்கூடிய விஷயம்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[Sri T. Sampath] [31st August 1959

அடுத்தாற்போல ஒரு விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். அதைத் தான் கனம் சீனுவாச ஐயர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதாவது இந்தத் திருத்த மசோதாவின் 4-வது பிரிவிலே எந்த இடத்தில் இருந்து இந்த வெகேஷன் நீதிபதி கோர்ட்டை நடத்துவது என்கிற பிரச்சனை நாமானிக்கப்படுகிறது. இந்த ஷரத்தில் கண்டுள்ளபடி பார்த்தால் வெகேஷன் ஜட்ஜ், ஜில்லா ஜட்ஜ் இருந்து நடத்தக்கூடிய இடத்திலிருந்து நடத்த வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் வெகேஷன் ஜட்ஜாக, சப் ஜட்ஜை நியமிக்கலாம் என்று இருக்கிறது. ஆகவே சப்-ஜட்ஜ் எந்த இடத்தில் இருந்து காரியங்களைச் செய்வார்களோ அந்த இடத்தில் இருந்தே வெகேஷன் ஜட்ஜ் நீதி விசாரணை செய்யலாம் என்று செய்தால் நன்றாக இருக்கும். அது அரசாங்கத்திற்கும் அதிகச் செலவு தரக்கூடியதாக இருக்காது என்று நினைக்கிறேன். அந்த அளவில் ஸ்ரீ சீனுவாச ஐயர் அவர்கள் கொடுத்திருக்கும் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

* SRI V. K. RAMASWAMY MUDALIYAR: Mr. Deputy Speaker, Sir, I heartily welcome this measure. This Bill has been a long-felt want. There has been undue delay in the disposal of civil cases in almost all the districts. Just as we have Vacation Judges in the High Court, it is right that we have Vacation Judges even at the district level. After the appointment of these Judges, the Government should see, through the High Court, that suits that are pending for long are disposed of as expeditiously as possible.

Some hon. Members have been making suggestions about the jurisdiction and location of these courts, etc. These are all matters for the Government to decide, and I think they will go into the matter fully, and consider all aspects of the question.

Sir, nothing is said about the additional cost that is likely to be incurred by the Government as a result of this measure. I hope the expenditure will not be much. So far as Judges are concerned, I do not know whether their work during the vacation period will be treated as leave or they will be given full pay. All these things are there for consideration. But so far as we are concerned, we heartily welcome this measure and hope that the Government will give effect to the provisions of this Bill early and appoint Vacation Judges with a view to the speedy disposal of cases.

This is all my submission, Sir.

* THE HON. SRI M. BHAKTAVATSALAM: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, ஜில்லா கோர்ட்டுகளில் உள்ள சில குறைபாடுகளை நீக்குவதற்கு இந்தத் திருத்த மசோதா கொண்டுவரப்படுகிறது. கோடை காலத்தில் ஜில்லா கோர்ட்டுகள் விடுமுறைக்கு மூடப்படும்பொழுது, வெகேஷன் கோர்ட்டுகள் திறந்து வைக்கப்படும். ஒவ்வொரு ஜில்லா கோர்ட்டுக்கும் தக்கபடி இருக்கும் ஜூரிஸ்டிக்ஷன் வெகேஷன் சப்-ஜட்ஜுக்கும் இருக்கிறது. இனி வழக்குகள் ஹைகோர்ட்டுக்கு வரவேண்டிய அவசியம் இல்லை. அந்தந்த ஜில்லா கோர்ட்டுகளில் நடைபெற்ற வழக்குகளை கோடை விடுமுறை காலங்களில் அந்தந்த ஜில்லா வெகேஷன் கோர்ட்டுகளே எடுத்துக்கொள்ளும். இந்த மசோதாவினால் நீதி நிர்வாகத்தில் தாமதம் இல்லாமல் இருக்கும்.

கோடை விடுமுறை காலங்களில் வெகேஷன் கோர்ட்டில் சப்-ஜட்ஜ நியமித்தால் அவர்களுக்கு சம்பளம், அவர்களுடைய சிப்பந்திகளுக்குச் செலவு முதலியவை நிர்ணயிக்கப்படவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார்கள். எவ்வளவு செலவு ஆகுமென்று குறிப்பாக இப்பொழுது

31st August 1959] [Sri M. Bhaktavatsalam]

தெரிவிப்பதற்கில்லை. இரண்டு மாதம் அவர்கள் உட்கார்ந்தால் சம்பளம் உண்டு—கொடுத்துத்தான் ஆகவேண்டும். இப்பொழுது ஹைகோர்ட்டில் வெகேஷன் ஜட்ஜ்கள் இருக்கிறார்களே அதேமாதிரி செய்ய ஏற்பாடு செய்யப்படும்.

முக்கியமாக கனம் அங்கத்தினர் ஸ்ரீ சீனுவாச அய்யர் ஒரு குறைபாட்டைச் சொன்னார்கள். ஜில்லா கோர்ட் ஜுரிஸ்டிக்ஷன் வெகேஷன் ஜட்ஜுக்கு இருக்கிறது என்று இருப்பதைப்பற்றிச் சொன்னார்கள். அவர்கள் சொன்னது தஞ்சை ஜில்லாவில் இரண்டு ஜில்லா கோர்ட்டுகள் இருக்கின்றன. மற்ற ஜில்லாக்களில் இந்தமாதிரி குறைபாடு இருப்பதாகச் சொல்வதற்கில்லை. அவர்கள் குறிப்பிட்டதெல்லாம் தஞ்சை ஜில்லாவைப் பற்றியது. அங்கேதான் இரண்டு கோர்ட்டுகள் இருக்கின்றன. ஒரு கோர்ட்டுக்கு ஜில்லா ஜுரிஸ்டிக்ஷன் இல்லை. மேலும் ஒரிஜினல் ஜுரிஸ்டிக்ஷன் இல்லை. சிவில் ஜுரிஸ்டிக்ஷன்தான் இருக்கிறது. சிவில் ஜுரிஸ்டிக்ஷன் என்றால் கூட, ஸ்ரீ சீனுவாச அய்யர் சொல்வது மேற்கு தஞ்சை ஜில்லா கோர்ட்டைப் பற்றியது. இரண்டு தாலுக்காக்களுக்கு சிவில் ஜுரிஸ்டிக்ஷன் இருந்தால் ஜில்லா கோர்ட் ஜுரிஸ்டிக்ஷன் என்றால் இரண்டு தாலுக்காக்களுக்கு மட்டும்தான் பொருந்தும் என்று சொன்னார்கள். சிவில் கோர்ட் ஆக்டில் 10-வது பிரிவின்படி ஜுரிஸ்டிக்ஷன் குறைவாக இருந்தாலும் அப்போதைக்கப்போது ஜில்லா கோர்ட் ஜுரிஸ்டிக்ஷனை மாற்ற அரசாங்கத்திற்கு அதிகாரம் இருக்கிறது.

" The : tate Government shall fix, and may from time to time vary, the local limits of the jurisdiction of any District Court or Subordinate Judge's Court under this Act "

ஆகையால் இம்மாதிரி குறைவாக இருந்தால்—ஜில்லா பூராவுக்கும் வரவில்லையென்றால்—10-வது செக்ஷன் பிரகாரம் ஒரு உத்திரவு போட்டு, அறிக்கை விட்டு ஜுரிஸ்டிக்ஷனை ஜில்லாவிற்கு ஏற்றவாறு மாற்றிக்கொள்ள அரசாங்கத்திற்கு அதிகாரம் இருக்கிறது. ஆகையால் இந்த மசோதாவில் எந்தவிதமான திருத்தத்திற்கும் அவசியம் இல்லை, மசோதாவை இப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

DEPUTY SPEAKER : The question is :

" That the Madras Civil Courts (Amendment) Bill, 1959, be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2.

DEPUTY SPEAKER : The motion is :

" That clause 2 do stand part of the Bill."

I think the Hon. Minister has already replied to all the points.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I have said Sir, that no amendment is necessary and that the Bill may be passed as it is. If it was considered that amendments were necessary, I could have submitted to you and you might have waived the rule governing notice and accepted the amendments. I stated that there was no need for amendments.

The clause was put and carried.

Clauses 3 and 4 were put and carried.

Clause 1 and the Preamble were put and carried.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, I move :

"That the Madras Civil Courts (Amendment) Bill, 1959, be passed."

DEPUTY SPEAKER : The question is :

"That the Madras Civil Courts (Amendment) Bill, 1959, be passed."

The motion was put and carried and the Bill was passed.

(2) THE MADRAS AGRICULTURAL INCOME-TAX (AMENDMENT) BILL, 1959.

* THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I beg leave to introduce the Madras Agricultural Income-tax (Amendment) Bill, 1959 [a] and move—

"That the Bill be taken into consideration."

Sir, in the Madras Plantations Agricultural Income-tax (Amendment) Bill, 1958, a special provision was made to collect the tax for the assessment year 1958–59 applying the composition formula to all persons liable to tax irrespective of the extent of their holdings. The Government consider that the special provision for the composition of tax should be extended to the assessment year 1959–60 also in view of the fact that the Amendment Act was published only in October 1958, and the rules were published only in January 1959, and that, as such the assessees would not have maintained accounts for the accounting year 1958–59. The Bill accordingly provides for the application of the composition formula for the assessment year 1959–60 also. This is the object with which the Bill is introduced.

DEPUTY SPEAKER : Motion moved :

"That the Madras Agricultural Income-tax (Amendment) Bill, 1959, be taken into consideration". '

SRI S. LAZAR : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த திருத்த மசோதாவை முழு மனதுடன் நான் வரவேற்கிறேன். நான் கேள்வி நேரத்தின் போது குறிப்பிட்டது போல் இப்பொழுது ஒரு தனிப்பட்ட சலுகை, அதாவது 50 ஏக்கருக்கு மேலாக நிலம் வைத்திருக்கக் கூடியவர்களுக்கு 1957–58, 1958–59 இந்த இரண்டு ஆண்டுகளுக்கு மட்டும் நிறுத்தி விடாது இந்தச் சலுகை எப்போதும் இருக்க வேண்டும், சட்டத்திலே இடம் பெற வேண்டுமென்று நான் சொன்னதற்கு கனம் அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே சட்டத்தில் இருக்கிறதென்ற முறையில் சொன்ஞர்கள். ஓரளவு அது சரியல்ல. என்று தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ளு

[a] Published in the *Fort St. George Gazette*, dated 5th August 1959.